1967 ஜூலை 13]

திரு. மா. இராசாங்கம் : ஆட்சி மொழிச் சட்டக் கமிட்டி எங்கே கூடுகிறது ? இதுவரை எத்தனை கூட்டங்கள் நடத்தியிருக்கிறது ? அதனுடைய குறிப்புகள் ஏதாவது சர்க்காருக்கு வந்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நம்முடைய உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதியவர்கள் அப்போதைக்கப்போது அந்தக் கூட்டத்தைக் கூட்டி வருகிறார்கள். எந்த இடத்திலே கூட்ட வேண்டுமென்று அவர்கள் நிர்ணயிப்பார்கள்.

பள்ளிகொண்டா பாலம்

* 314 வினா.—**திரு. வி. கே. கோதண்டராமன் :** மதிப்பிற்குரிய பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வடார்க்காடு ஜில்லாவிலுள்ள பள்ளிகொண்டா பாலத்தை உயர்த்திக் கட்டும் உத்தேசம் உண்டா ?

(இ) ஆம் எனில், அதன் விவரமென்ன ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) அவ்விதமான திட்டமொன்றும் உத்தேசிக்கப்படவில்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், இங்கு சர்க்கரை ஆலைக்குக் கரும்பு கொண்டு செல்ல வேண்டுமென்றால் அந்தப் பாலத்தின் வழியாகத்தான் செல்லவேண்டும். ஆகவே, ஒவ்வொரு வருஷமும் மழைக் காலத்திலேயெல்லாம் அந்தப் பாதையிலே செல்ல முடியாத அளவிற்கு பாதிக்கப்படுகிறது என்பது கனம் அமைச்சரவர்களுக்குத் தெரியுமா ? இன்று சர்க்கார் பணத்திலிருந்து அந்தப் பாலத்தைக் கட்டவில்லை என்றாலும் சர்க்கரை ஆலையிலிருந்து வாங்கக்கூடிய "செஸ் நிதி" பணத்திலிருந்து அந்தப் பாலத்தைக் கட்ட உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அந்தப் பாலம் கட்டுவதற்காகச் செலவு ஒதுக்கீடு ரூ. 20 லட்சம் என்று குறிப்பிட்டிருக்கிறது. ஆகவே அந்தப் பாலத்தில் இருக்கிற கஷ்டம் தெரிவது போலவே அதைக் கட்டுவதற்காக நிதிக் கஷ்டம் இருக்கிறது என்றும் அமைச்சரவைக்குத் தெரிகிறது.

திரு. வி. எஸ். கோவிந்தராசன் : தலைவரவர்களே, சென்னை அடையாறு எல்பினேடு பாலம் பழுது பார்க்கப்பட்டது சரியாக இல்லையென்றும், அதில் பஸ்களை விட்டுப் பார்த்தபோது பாலம் ஆடியது என்றும், அதைப் பூகம்பம் என்று நினைத்து மக்கள் பயந்து விட்டார்கள் என்றும் காலையில் ஒரு கட்சிப் பத்திரிகையில் செய்தி வெளிவந்ததே, அது உண்மையா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இந்தக் கேள்விக்கு அது தொடர்பு இல்லை என்றாலும், ஒரு பயங்கர செய்தியை மாண்புமிகு உறுப்பினரவர்கள் பத்திரிகையில் பார்த்ததாகச் சொல்லுகிறார்கள். அந்தப் பத்திரிகைச் செய்தி முற்றிலும் தவறானது. அங்கு ஒன்றும் பூகம்பம் ஏற்படவில்லை. எந்தப் பயங்கரமும் நிகழவில்லை. அது பத்திரிகைச் செய்தி என்பதால் அதைப்பற்றி நான் அதிகமாக விளக்க விரும்பவில்லை.

திரு. வி. கே. கோதண்டராமன் : அதை 20 லட்சம் ரூபாய் செலவு செய்து பெரிய பாலமாகக் கட்டவில்லை என்றாலும் 4 அடி உயரமாவது உயர்த்த 5 லட்சம் ரூபாய் செலவிலே கட்ட உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இப்பொழுது ஏற்கெனவே அங்கு ஊடுபாதை இருக்கிறது. உறுப்பினர் சொல்லும் யோசனைகள் பரிசீலிக்கப் படும்.

திரு. வி. எஸ். கோவிந்தராசன் : தலைவரவர்களே, அடையாறு பாலத்தைப்பற்றி இப்படித் தகவலை . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 320 அடையாறு பாலத்தைப்பற்றி இருக்கிற காரணத்தினால் அந்த வினாவையும் இப்பொழுது எடுத்துக்கொள்ளலாம்.

Adyar bridge

* 320 *Q*.—THIRU **K. VINAYAKAM: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—**

(*a*) **Whether the Adyar bridge is in a damaged condition ;**

(*b*) **if so, the extent of the damages ; and**

(*c*) **the steps taken to restore the bridge to a fit condition ?**

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ), (இ) : அடையாறு பாலத்தில் மைலாப்பூர் முனையிலிருந்து 11, 12, 14, 15-ம் கண்களில் பல வெடிப்புகள் ஏற்பட்டுள்ளன.

(உ) வெடிப்பு ஏற்பட்டுள்ள வளைவுகட்டுமானத்தின் மேல் பளு தாங்கும் கான்கிரீட் பலகை அமைத்து அதன் மேற்பகுதிக்கு வலு வூட்டவும், தேவையான இடங்களில் பாலத்தின் அடிதளச் சுவர்களை வலுப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. வி. எஸ். கோவிந்தராசன் : அடையார் பாலம் பற்றி இப்படி பல தகவல்களும் எழுதியிருப்பதிலிருந்து பாலத்திலும் ஏதாவது சதி செய்ய யாராவது முன்கூட்டித் திட்டமிட்டிருப்பார்களா ? அதற்குப் போலீஸ் பாதுகாப்பு அளிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : தவறான செய்திகளை வெளி யிடுகின்ற அந்தப் பத்திரிகையைப் பற்றி இந்த அரசு அவ்வளவாகக் கவலைப்படுவதில்லை.

திரு. கே. விநயகம் : செங்கற்பட்டு மாவட்டத்திலிருந்து சென்னைக்கு வருகிற பொதுமக்கள் உபயோகப்படுத்துகிற வழிகளில், இந்த அடையார் பாலமும் ஒன்று. ஆகையால், சைதாப்பேட்டைப் பாலத்தை அகலப்படுத்தி யிருப்பதைப்போல், இந்த அடையார் பாலத்தைப் பழுது பார்ப்பதைவிட, இதை எடுத்துவிட்டுப் புதிய பாலமாக, பெரியதாகக் கட்ட அரசாங்கம் யோசிக்குமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : புதிய பாலம் கட்டுவதற்கு ஏற் பாடு செய்யப்பட்டு, அதற்கான திட்டங்கள் எல்லாம் தீட்டப்பட்டன. அதன் படி அந்தப் பாலத்திற்கு நாற்பது லட்சம் ரூபாய் செலவாகும் என்று பொறியாளர்கள் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். இதற்கிடையிலே, இந்த அரசு பொறுப்பேற்றதும் அந்தப் பாலத்தால் ஏற்படக்கூடிய ஆபத்தை மிக விரைவிலே தவிர்க்க வேண்டும் என்று அந்தப் பகுதி மக்களாலும் பொறியாளர்களாலும் எடுத்துக் சொல்லப்பட்டது. கிட்டத்தட்ட ஐந்தாறு நாட்களுக்குள்ளேயே சீர்கெட்டு, திடீரென்று எந்த நேரத்திலும் உடைந்து விடக்கூடும் என்ற பயங்கர நிலைமையில் இருந்த அந்தப் பாலத்தை உடனடியாக, குறைந்த செலவில், பழுது பார்த்து, பிறகு பெரும் திட்டமாக நாற்பது லட்ச ரூபாய் செலவில், பெரிய பாலத்தை அதற்குப் பக்கத்தில் அமைக்கலாம் என்ற எண்ணத்தோடு தான் முதலில் இந்தப் பாலத்தைச் சீர்திருத்துவதற்கான காரியம் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது.

டாக்டர் எச். வி. ஹாண்டே : இந்தப் பாலத்தை எப்பொழுதுதான் சீர்திருத்தப்போகிறார்கள் ? இன்னும் எத்தனை நாட்களுக்குள்ளே அந் தப் பாலத்தின் மீது மோட்டார்கள், பஸ்கள், லாரிகள் செல்லலாம் என் பதை அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா ?